**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,Tindivanam.**

**CCIW.CASE NO. 20/2011**

**Prosecution witness – PW – 3**

| | | | |
|---|---|---|---|
| Date | 04.02.2026 | Calling | |
| Name | சக்திவேல் | Religion | |
| Father/Husband Name | குருசாமி | Age | 68 |
| Village/City | வத்திராயிருப்பு | Caste. | |

**A2,A3,A5 to A7, A10,A11, A15 present. A13 absent. 317 Petition filed and allowed.**

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 17-வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

1. 100% பயிர் கடன் சரிபார்ப்பு குழுவில் எத்தனை நபர்கள் நியமனம் செய்யப்பட்டு இருந்தார்கள் என்றால் மூன்று நபர்கள். அவர்கள் யார் யார் என்றால் முத்துக்குமரன், தில்லைவெள்ளாளன் மற்றும் நான். நாங்கள் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை கடன்களை பரிசீலனை செய்தோம் என்றால் 31.08.2004 -லிருந்து பரிசீலனை செய்தோம். நான் 2004 ஆம் ஆண்டிற்கு முந்தைய வருடத்திற்கான கடன்களை சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். நான் 1993 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை கடன்களை சரி பார்த்தேனா என்றால் சரி பார்த்தேன். எங்களது 100 சதவீத ஆய்வுக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தான் விசாரணை அதிகாரி விசாரணையை தொடங்கினார் என்றால் சரிதான். எங்கள் குழுவின் மூலம் எத்தனை அறிக்கைகளை துணைப்பதிவாளருக்கு சமர்ப்பித்தேன் என்றால் ஒரு அறிக்கை தனி அறிக்கை தான் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கையில் சென்னை பதிவாளரின் சுற்றறிக்கை எண் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விழுப்புரம் ஆணையர்

செயல்முறை ஆணையை குறிப்பிட்டு எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். நான் மேற்படி விவரங்களை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. மரக்காணத்தை சரகம் என்று நாங்கள் சொல்லுவோம். மரக்காணம் ஒன்றியம் தான் என்றாலும் நான் எனது முதல் விசாரணையில் சரகம் என்று தவறாக சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல. மரக்காணம் ஒன்றியத்தில் எத்தனை வங்கிகள் செயல்படுகிறது என்றால் 11 வங்கி இருக்கும். நாங்கள் நூறு சதவீத கடன் தணிக்கை செய்து பிரம்மதேசம் கூட்டுறவு வங்கிக்கு மட்டும்தான் அறிக்கை சமர்ப்பித்தோம் என்றால் சரிதான். 02.12.2004-ல் நான் மற்றொரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி அறிக்கையில் எண்டியூர், ஆலகுப்பம், வேப்பேரி மற்றும் பிரம்மதேசம் ஆகிய வங்கிகளுக்கும் அறிக்கையை சேர்த்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இருக்கலாம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 02.12.2004 இல் நான் தாக்கல் செய்த அறிக்கை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருந்தேன்.

3. 08.08.2012 தேதியில் அளித்த முதல் விசாரணையில் 2.12.2004 மற்றும் 17.12.2004 இரு அறிக்கைகளை துணைப்பதிவாளர் அவர்களுக்கு சமர்ப்பித்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 17.12.2004-ல் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் 11.12.2004 -ல் அறிக்கையில் ஒரு அறிக்கை தான் சமர்ப்பித்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றாலும் எந்த அறிக்கை சரியானது என்றால் 17.12.2004-ல் கடைசியாக கொடுத்தேன். 02.12.2004 அறிக்கையில் 21.10.2004 தேதியில் ஒரு அறிக்கை சமர்ப்பித்ததாக குறிப்பிட்டு நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தனி அலுவலர் கருணாநிதி என்பவர் வங்கியில் பணிபுரியவில்லை என்றால் அவர் துணைப்பதிவாளரின் கீழ் வேலை செய்து வருகிறார். தனி அலுவலர் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் ஊழியர் இல்லை என்றால் சரிதான். தனி அலுவலர் திண்டிவனம் துணை பதிவாளர் அலுவலகத்தில் பிரிவு உதவியாளராக பணிபுரிபவர் என்றால் சரிதான். நான் தனி அலுவலரை தொடர்பு கொண்டு பயிர் கடன் பரிசீலனை தொடர்பாக பேசினேனா என்றால் பேசினேன். தனி அலுவலர் என்ன கூறினார் என்பதை பொறுத்து எனது அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர் ஒத்துழைக்க மறுத்துவிட்டார். நான் சொல்வது போல் தனிய

அலுவலர் ஒத்துழைப்பு அளிக்காமல் இல்லை என்றாலும் அவர் ஒத்துழைப்பு அளித்ததால்தான் நான் தனி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

4. எங்கள் குழுவினர் 11 எல்லைகளில் உள்ள கிராமங்களுக்கு சென்றோம் என்றால் சரிதான். 1797 உறுப்பினர்களையும் நாங்கள் பார்த்தோம் என்றால் சரிதான். 1797 நபர்களும் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருப்பதால்தான் அவர்களை அடையாளம் கண்டு நாங்கள் சென்று விசாரணை செய்தோம் என்றால் சரிதான். 1797 நபர்களும் ஏற்கனவே வங்கியில் சேர்ந்து கடன் பெற்றுள்ளார்கள் என்பது ஊர்ஜிதம் ஆகி உள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 1797 உறுப்பினர்களின் 247 நபர்கள் இறந்தவர்கள் போக மீதமுள்ள 1550 அவர்களின் கடன்களை நாங்கள் சரிபார்த்தது உண்மை என்றால் இறந்தவர்கள் வெளியூர் சென்றவர்கள் ஆகியோரை தவிர்த்து மற்றவர்களை விசாரணை செய்தோம். விசாரணை அதிகாரி இனம் எண்.3-ல் 371 நபர்கள் கற்பனையான போலியான நபர்கள் என்று சொல்லி உள்ளது தவறானது என்றால் சரிதான். நான் முன்னுக்கு முரணாக சொல்கிறேன் என்றாலும் மேற்படி 371 நபர்களை நேரில் சென்று விசாரித்து வாக்குமூலம் பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றாலும் உண்மையிலேயே மேற்படி நபர்கள் கற்பனையான போலியான நபர்களாக இருந்திருந்தால் எங்களால் வாக்குமூலம் பெற்றிருக்க இயலாது என்றாலும் சரிதான்.

5. எங்கள் 100% பரிசீலனைக்குழு 17.09.2004 இல் பிரம்மதேசம் கூட்டுறவு வேளாண்மை வங்கியில் சென்று கடன் பரிசீலனை பணியை மேற்கொள்ள படிவம் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அந்த படிவத்தை பூர்த்தி செய்து எங்களிடம் எத்தனை நாட்களில் கொடுத்தார்கள் என்றால் ஐந்து நாளில் சமர்ப்பித்தார்கள். அந்த படிவத்தில் என் முன்னிலையில் தான் கடன் பெற்றதை ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிரம்மதேசம் கூட்டுறவு வேளாண்மை வங்கியில் கொடுத்த கடன் படிவம் என்றால் சரிதான். அதில் நான் விசாரணை செய்த 1797 உறுப்பினர்கள் என் முன்னிலையில் தான் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி உறுப்பினர்கள் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதை ஒப்புக்கொண்டு தான் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான் ஆனால் ஒரு சிலர் தாங்கள் கடன் பெறவில்லை என்று சொன்னார்கள். அந்த

ஒரு சில நபர்களின் பெயரை குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் ஒரு சில நபர்கள் கடன் பெறவில்லை என்று என்னிடம் சொல்ல வில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. நான் எனது அறிக்கையில் ஒரே நிலப்பரப்பில் இருவருக்கு கடன் வழங்கியதாக தனி அறிக்கையிலும் எனது முதல் விசாரணையிலும் 37 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரிதான். ஆனால் விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் இனம்-3ல் ஒரே நிலப்பரப்பில் 21 நபர்களுக்கு கடன் வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தான் விசாரணை அதிகாரி தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பொழுது எனது அறிக்கை சரியானதா அல்லது விசாரணை அதிகாரியின் அறிக்கை சரியானதாக என்றால் நான் கொடுத்த அறிக்கை தான் சரியானது. விசாரணை அதிகாரி எனது அறிக்கையை மறைத்து வேறொரு அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஒரு நபருக்கு இருமுறை கடன் வழங்கியதாக எனது தனி அறிக்கையிலும் முதல் விசாரணையிலும் 370 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரிதான். என்னது விசாரணை அடிப்படையில் நான் அறிக்கை கொடுத்துள்ளேன் விசாரணை அதிகாரி அவர் விசாரணையின் அடிப்படையில் அறிக்கை கொடுத்துள்ளார்.

7. விசாரணை அதிகாரியின் அறிக்கையில் இனம் 7-ல் 57 நபர்கள் என்று தான் குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் அவர் விசாரணை செய்யும் போது சில நபர்களை விட்டு இருக்கலாம். விசாரணை அதிகாரி சரியான முறையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சிட்டா, ஆண்டு கடன் அளவு மனு (ACL) ஆண்டு கடன் அனுமதியை விட கூடுதலாக கடன் வழங்கியதாக எனது தனி அறிக்கையில் மற்றும் முதல் விசாரணையில் 37 நபர்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் 9 நபர்கள் என்று தான் குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் சரிதான். கடன் பேரேட்டில் சிட்டா இல்லாமலும் அதற்குரிய சர்வே எண் குறிப்பிடாமல் 10 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டதாக எனது தனி அறிக்கையிலும் முதல் விசாரணை தெரிவித்துள்ளேன் என்றாலும் ஆனால் விசாரணை அதிகாரி அந்த பத்து நபர்கள் குறித்து தன்னுடைய அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை

என்றால் சரியல்ல. கடன் பேரேடு படி கடன் பெறவில்லை என தெரிவிக்காத தனி அறிக்கையிலும் என்னுடைய முதல் விசாரணையிலும் ஐந்து நபர்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் இனம் 8-ல் விசாரணை அலுவலர் அறிக்கையில் 327 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும் அதில் எது உண்மையானது என்றால் நான் பார்க்கும் பொழுது ஐந்து நபர்கள் இருந்தார்கள்.

8. செஞ்சி வட்டக் குழு மேலாளராக முத்துக்குமரப்பன் திண்டிவனம் வட்ட குழு மேலாளராக பணிபுரிந்த பொழுது செயலாளருக்கும் முத்துக்குமாரப்பனுக்கும் துறை ரீதியாக பிரச்சனை ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அந்தப் பிரச்சினையின் பெயரில் தான் சகாதேவன் என்பவரால் செஞ்சி வட்ட குழு மேலாளராக பணி மாறுதல் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. சங்க செயலாளர் சகாதேவன் என்பவரை பழி வாங்க வேண்டும் என்பதற்காக தான் நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு தவறான அறிக்கையை சமர்ப்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் வேண்டும் என்றே செயலாளரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாலுகா அலுவலகத்தில் சிட்டா நகல்கள் மற்றும் வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்து தவறான ஒரு அறிக்கையை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் நாங்கள் நான்கு அறிக்கையை சமர்ப்பித்து விட்டு மற்ற வங்கிகளில் ஒரு அறிக்கை மட்டும் சமர்ப்பித்துள்ளோம் என்றால் சரியல்ல.

9. தனி அலுவலர் எனது விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுத்தார் என்றாலும் நான் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அறிக்கையில் ஐந்து இனங்களில் தான் குறைபாடு உள்ளது என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான். விசாரணை அதிகாரி அவருடைய அறிக்கையில் 20 இனங்களில் முறைகேடு நடந்ததாக தவறாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் நாங்கள் பார்க்கும் பொழுது ஐந்து இனங்களில் தான் முறைகேடு இருந்தது. நாங்கள் குறைபாடு உள்ளதாக அறிக்கை சமர்ப்பித்த ஐந்து இனங்களில் தான் விசாரணை அதிகாரி விசாரணை மேற்கொண்டு இருக்க வேண்டும் என்றாலும் ஆனால் விசாரணை அதிகாரி தன்னிச்சையாக 20 இனங்களில் முறைகேடு நடந்ததாக விசாரணை மேற்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. எனது தனி அறிக்கையில் 175 நபர்களை

மட்டும் தான் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் எனது விசாரணையில் விசாரணை அதிகாரியின் அறிக்கையில் சொல்லியுள்ள விவரங்களை மறைத்த அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்னா என்றால் இல்லை எனது விசாரணையில் தெரிய வந்தவற்றை வைத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். 1797 நபர்களும் உறுப்பினராக இருந்து பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் ஏற்கனவே கடன் பெற்றுள்ளார்கள் என்றாலும் அவர்கள் என் முன்னிலையில் கடன் பெற்றதாக சொல்லி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றாலும் உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கும் கடன் கொடுத்துள்ளார்கள். 1797 நபர்களும் உறுப்பினராக இருந்து பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக சேர்ந்து அவர்கள் பெற்ற கடனை ஒத்துக்கொண்டு 100% ஆய்வுக் குழுவின் முன்னிலையில் படிவத்தில் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**. ( Except A13, A17)**</u>

1. எங்களது சரக துணை பதிவாளரின் உத்தரவின் பேரில்தான் மூன்று பேர் கொண்ட ஆய்வு குழு உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் மூன்று நபர்களும் சேர்ந்து தான் அறிக்கை தயார் செய்து எங்களது அறிக்கையை துணைப் பதிவாளருக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். அந்த அறிக்கையானது ஆவணங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்ட அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். ஒவ்வொரு நிதியாண்டும் தணிக்கை செய்வதற்கு ஒரு தணிக்கையாளர் நியமிக்கப்பட்டு ஆண்டுதோறும் அவர் தணிக்கை செய்வார் என்றால் சரிதான். அவ்வாறு தணிக்கை செய்யப்பட்டதில் தணிக்கையாளரின் ஆய்வில் எந்த குறைபாடும் கண்டறியப்படவில்லை என்றால் அவர் தயார் செய்த ஆய்வு முடிவை பற்றி எனக்கு தெரியாது. நான் உண்மையிலேயே வங்கியில் உள்ள ஆவணங்களை பார்த்திருந்தால் மேற்படி விவரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. குறைபாடுகள் தொடர்பாக நேரடியாக சென்று உறுப்பினர்கள் அனைவரையும் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். நான் எத்தனை நபர்களை விசாரணை செய்தேன் என்றால் 1797.

2. நான் விசாரணை செய்து அத்தனை நபர்களிடமும் படிவத்தில் கையொப்பம் பெற்றேனா என்றால் பெற்றேன். அந்த படிவமானது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் நேரடியாக யாரையும் விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அடிப்படையில்தான் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் ஆரம்பித்து எந்த தேதியில் ஆய்வை முடித்தேன் என்றால் 17ம் தேதி செப்டம்பர் மாதம் 2004 முதல் அக்டோபர் மாதம் 2004-ல் முடித்தேன். பிரம்மதேசம் கூட்டுறவு சங்கத்தில் தினபேரேடு போன்ற சில ஆவணங்களை சங்க செயலாளர் மறைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நிதி முறை கேட்டு சம்பந்தமாக எந்தெந்த ஆவணங்களை நான் ஆய்வு செய்தேன் என்பதை பொறுத்து போலீஸ் விசாரணை மற்றும் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். நாங்கள் மூன்று நபர்களும் நேரடியாக சென்று சரிவர ஆய்வு செய்திருந்தால் பிரம்மதேசம் கூட்டுறவு சங்கத்தில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்ற விவரம் எங்களுக்கு தெரிய வந்திருக்கும் என்றாலும் சங்க செயலாளரை பழிவாங்க வேண்டும் என்பதற்காக தவறான ஒரு ஆய்வு அறிக்கையை துணைப்பதிவாளருக்கு அனுப்பி வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அறிக்கை சரியானது அல்ல என்றால் சரியல்ல.

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு **13-**வது எதிரி **(**வெங்கடசாமி**)** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.**</u>

1. விசாரணை அதிகாரி ஆரோக்யராஜ் விற்பனை அதிகாரியாக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 13-வது எதிரி வெங்கடசாமி என்பவரை நான் நேரடியாக விசாரணை செய்தேனா என்றால் நான் தனிப்பட்ட முறையில் அவரை பார்த்து விசாரிக்கவில்லை. 1797 நபர்களிடம் நான் தனித்தனியாக கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். என்னிடம் தனித்தனியாக 1797 படிவம் உள்ளது என்றால் சரிதான். எனது அறிக்கையில் வெங்கடசாமி என்ற பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.